[2010 மே 4

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரினுடைய போக்குவரத்து நெரிசலைத் தீர்ப்பதற்காக மதுரை நகருக்கு வெளியே வெளிவட்டச் சாலை ஒன்று நான்கு புறங்களும் இணைக்கின்ற வகையிலே அமைக்கப்பட்டது. ஆனால் மூன்று புறங்களில்தான் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உத்தங்குடியிலிருந்து சமயநல்லூர் வரை அந்த இணைப்புச் சாலை இன்னும் அமைக்கப்படவில்லை. அந்தச் சாலையை அமைத்தால்தான் அந்தப் புறவழிச் சாலை முழுமை அடையும் என்பதை அரசுக்குத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் புறவழிச் சாலை முழுமையடைவதற்கு எப்போது அறிவிப்பார் என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக தேசிய நெடுஞ்சாலை எண் 7-இல்தான் அந்தப் புறவழிச் சாலை அமைப்பதற்குரிய திட்டம், மத்திய அரசின் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலமாக எடுக்கப்பட்டது. இடையிலே கட்டுமானப் பொருள்களுடைய விலையேற்றம் போன்ற பிரச்சினைகள் காரணமாக, ஒப்பந்ததாரருக்கும், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதற்குப் பிறகு, கருத்து வேறுபாட்டிற்குத் தீர்வு காணப்பட்டு, பணிகள் சில இடங்களிலே வேகமாக நடைபெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற அந்தக் குறைபாட்டை சரி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

140—

விடுதி

***113205—திரு. சுப. மதியரசன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 மே 4]

(அ) இளையான்குடியில் ஆதி திராவிட மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இளையான்குடியில் ஆதி திராவிட மாணவியர் விடுதி அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன்.

திரு. சுப. மதியரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளையான்குடியில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றும், அஹமதியா உயர்நிலைப் பள்ளி ஒன்றும், இளையான்குடி மேல்நிலைப் பள்ளி ஒன்றும், மேலப் பள்ளிவாசல் முஸ்லிம் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், ஹாஜி கே.கே. இப்ராஹிம் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், ஆக மூன்று மேல்நிலைப் பள்ளிகளும், இரண்டு உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. இங்கு அதிக அளவில் கிராமப்புற மாணவர்கள் வந்து படிக்கிறார்கள். அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு, இளையான்குடியில் இந்த நிதியாண்டிலேயே ஒரு மாணவர் விடுதி அமைத்துக் கொடுத்திட முன்வருவாரா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் 24 பள்ளி மாணவர் விடுதியும், 9 பள்ளி மாணவியர் விடுதியும், கல்லூரி விடுதியைப் பொறுத்தவரையில் 6 விடுதிகளும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆக மொத்தம் 39 விடுதிகள் சிவகங்கை மாவட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. வருகின்ற நிதியாண்டில் உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். நம்முடைய இராமநாதபுர மாவட்ட அமைச்சர் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர் ஐயா அவர்கள் இதைக் குறிப்பிட்டு, இந்தப் பகுதியில் நீங்கள் அமைத்துக் கொடுங்கள் என்று சொன்னார்கள். வருகின்ற ஆண்டிலே அது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2010 மே 4

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன்.

திரு. சுப. மதியரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எனது தொகுதியிலுள்ள இளையான்குடிக்குக் கேட்டிருக்கிறேன். நீங்களும் இங்கேதான் தங்கிப் படித்தீர்கள். தயவுசெய்து, விரைவிலே எனது தொகுதியிலுள்ள இளையான்குடியில் ஒரு மாணவியர் விடுதி அமைத்துக் கொடுத்திட பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் அதே இடத்தில் அமைக்க வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதே இடத்தில்தான் அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். நிச்சயமாக இந்த ஆண்டு விடுதி அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. மத்திய திட்டக் குழுவிடம் தமிழகத்திற்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்றுத் தந்த மாண்புமிகு முதலமைச்சருக்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் முதலில் உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன், நீங்கள் உட்கார்ந்துகொண்டு கையைத் தூக்கினாலும் எனக்குத் தெரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.